இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**வத்திக்கான் வளாகத்தின் மேல் மாடத்தில் புதிய திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் மக்கள் முன் தோன்றி வாழ்த்து கூறினார். திருஅவையை வழிநடத்தும் 267வது திருத்தந்தையாக அகுஸ்தீன் சபையைச் சார்ந்த கர்தினால் Robert Francis, O.S.A. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.**

# திருஅவையின் 267 – ஆவது திருத்தந்தை பதினான்காம் லியோ

திருத்தந்தை பதினான்காம் லியோ (@Vatican Media)



திருஅவையை வழிநடத்தும் 267வது திருத்தந்தையாக அகுஸ்தீன் சபையைச் சார்ந்த கர்தினால் Robert Francis, O.S.A. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

Robert Francis Prevost என்னும் இயற்பெயர் கொண்ட கர்தினால் அவர்களை திருஅவையின் திருத்தந்தையாக கர்தினால் தோமினிக் மம்பர்த்தி அவர்கள் மே 8 வியாழன் மாலை 7.30 மணியளவில் வத்திக்கான் வளாகத்தின் மேல் மாடத்தில் இருந்து அறிவித்தார்.

வத்திக்கான் தூய பேதுரு பேராலய வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் முன்பாக, மேல் மாடத்தில் தோன்றிய கர்தினால் தோமினிக் மம்பர்த்தி அவர்கள், Annuntio vobis gaudium magnum: habemus Papam!, "நான் உங்களுக்கு ஒரு பெரிய மகிழ்வான செய்தியை அறிவிக்கிறேன்: நாம் ஒரு திருத்தந்தையைப் பெற்றுவிட்டோம்" என்று கூறினார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் சிகாகோவைச் சார்ந்த கர்தினால் Robert Francis Prevost அவர்கள் திருஅவையின் 267-ஆவது திருத்தந்தையாகத் தேர்த்தெடுக்கப்பட்டு பதினான்காம் லியோ என்ற பெயரைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்பதை அறிவித்தார். மக்கள் அனைவரும் இடைவிடாது கரவொலி எழுப்பி தங்கள் மகிழ்வை வெளிப்படுத்தினர்.

1955 - ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று அமெரிக்காவின் சிகாகோவில் (Illinois) பிறந்தவர்தான் நம் திருத்தந்தை 14ஆம் லியோ.

2020-ஆம் ஆண்டு ஏப்ரல் 15, அன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவரை கல்லோ மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க நிர்வாகியாகவும், 2023, ஜனவரி 30, அன்று, ஆயர்களுக்கான திருப்பீடத்துறையின் புதிய தலைவராகவும், இலத்தீன் அமெரிக்காவிற்கான திருப்பீட ஆணையத்தின் தலைவராகவும் நியமித்தார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# காசாவிற்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்ட திருத்தந்தையின் வாகனம்



போர் மற்றும் வன்முறைகளால் நிறைந்த இவ்வுலகிற்கு அமைதியைக் கொண்டு வரும் நோக்கில் பல்வேறு செயல்களையும் உதவிகளையும் செய்து வந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தான் இறந்த பிறகும் அந்த உதவிகளை வழங்கும் நோக்கில் அவர் பயன்படுத்திய திருத்தந்தை வாகனமானது (papamobile) காசா பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான மருத்துவமனை சிகிச்சைக்காக அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்படுபவர்களுடனான திருத்தந்தையின் நெருக்கத்தை வெளிப்படுத்தும் விதமாக, திருத்தந்தை பிரான்சிஸ் பல இலட்சக் கணக்கான மக்கள் நடுவே வந்து, அவர்களைச் சந்தித்த திருத்தந்தை வாகனமானது குழந்தைகளின் மருத்துவ சிகிச்சைகளுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

நலவாழ்வுப் பராமரிப்பு சரியாகக் கிடைக்காதவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ளவர்கள் ஆகிய குழந்தைகளுக்கு உதவும் நோக்கில் திருத்தந்தையின் வாகனம் மாற்றப்பட்டுள்ளது என்றும், மறைந்த திருத்தந்தையின் அன்பு, கவனிப்பும் நெருக்கம், வலிமை, இரக்கம் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது என்றும் கூறினார் Svezia காரித்தாஸ் அமைப்பின் பொதுச்செயலர் Peter Brune.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# தூய ஆவியார் எதிர்நோக்கின் ஒளியை மிளிரசெய்கிறார் (உருவாக்கப் பயிற்சி)



நமது திருஅவை இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதலை 50 நாட்களுக்கு பிறகு பெந்தகொஸ்தே பெருவிழாவாகக் கொண்டாடுகிறது. இந்த விழாவை முன்னிட்டும் கிள்ளான் வட்டார பேரவை குழு தூய ஆவியார் எதிர்நோக்கின் ஒளியை மிளிரசெய்கிறார் என்ற தலைப்பில் ஒரு நாள் உருவாக்கப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தனர். லூர்து அன்னை, புனித அன்னம்மாள், புனித பவுல் மற்றும் பேதுரு மற்றும் இரட்சிப்பின் மீட்பு ஆகிய தேவாலயங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 350க்கும் மேற்பட்ட பங்கு மக்கள் கலந்து கொண்டனர். இந்த பயிற்சி நான்கு மொழிகளில் நடைபெற்றது. அருள்தந்தை கிரிகோரி சான் ஆங்கிலத்திலும், அருள்தந்தை டேவிட் தமிழிலும், அருள்தந்தை ஞான செல்வம் மற்றும் அருள்தந்தை யூஜின் பெனடிக்ட் மலாயிலும், மற்றும் அருள்தந்தை என்ரு கூய் சீன மொழியிலும் வழிநடத்தினார்கள். துதி ஆராதனையுடன் இந்த நிகழ்வு தொடங்கப்பட்டது.

முதல் பகுதி, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, பரிசுத்த ஆவியின் அடையாளத்தை மையமாகக் கொண்டிருந்தது. அவர்கள் மூவொரு இறைவன் பற்றியும், நாம் கூறும் விசுவாசக் அறிக்கையையும் விளக்கினர். அவர்கள் இந்த உலகில் தூய ஆவியானவர் கடவுளின் பிரசன்னம் குறித்தும், என்றும் அவர் நமது துணையாளராகவும், நம்மை வழிநடத்தி, வல்லமை அளித்து, விசுவாசத்தில் வளர உதவுகிறார் என்றும் தெளிவாக விளக்கினார்கள்.

இரண்டாவது பகுதி, நமது அன்றாட வாழ்வில் பரிசுத்த ஆவியார் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை மையமாகக் கொண்டிருந்தது. தூய ஆவியார், இயேசுவின் போதனைகளை நாம் ஆழமாக உணரவும், கடின வழ்நிலைகளில் ஆறுதல் மற்றும் நம்பிக்கையை பெறவும், இயேசுவைப் போல அன்பு செலுத்தவும் நம்மை வழிநடத்துகிறார். திருமுழுக்கின் வழியாகவும், அருட்சாதனங்கள் வழியாகவும், தூய ஆவியார் நம்மில் இருந்து, நம்மை இயேசுவின் நம்பிக்கையுள்ள சீடர்களாக உருவாக்க துணை புரிகிறார் என்பதை விளக்கினார்கள்.

இறுதியாக அனைவரும் ஆவியாரின் உதவியுடனும் வழிகாட்டுதலுடனும் வாழவேண்டும் என வலியுறுத்தினர். ஆவியானவரோடு கடவுளுடன் இணைய முயற்சி செய்யும்போது நம் வாழ்கையையும் மனதையும் மாற்ற, விண்ணரசின் திட்டபடி அமைத்திட முடியும் எனவும் விளக்கினார்கள்.

இப்பயிற்சி நற்கருணை ஆராதனை மற்றும் திருப்பலியோடு நிறைவு பெற்றது. பலர் தூய ஆவியின் பிரசன்னத்தை உணர்ந்தனர். இந்த நிகழ்வை சிறப்பாக வழிநடத்திய கிள்ளான் வட்டார பேரவை குழு அனைத்து அருட்தந்தையர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறது.

நேசா தேவசகாயம் - லூர்து அன்னை கிள்ளான்

# அலோர் ஸ்டார்: புனித மைக்கேல் தேவாலயத்தின் தமிழ் அப்போஸ்தலர் பணிக்குழு சிறைச்சாலை சேவையகத்துடன் இணைந்து கடந்த மே மாதம் 2ஆம் தேதி குற்றத்தடுப்பு சொற்பொழிவு ஒன்றினைப் பங்கில் ஏற்பாடு செய்தது.





அலோர் ஸ்டார்: புனித மைக்கேல் தேவாலயத்தின் தமிழ் அப்போஸ்தலர் பணிக்குழு சிறைச்சாலை சேவையகத்துடன் இணைந்து கடந்த மே மாதம் 2ஆம் தேதி குற்றத்தடுப்பு சொற்பொழிவு ஒன்றினைப் பங்கில் ஏற்பாடு செய்தது.

இந்த நிகழ்ச்சியை மலேசிய தேசிய காவல்துறையைச் (PDRM) சேர்ந்த மேல்நிலைத் துணைக் கண்காணிப்பாளர் உயர்திரு அங் வீ லியோங் அவர்கள் வழி நடத்தினார். இதில் பல்வேறு வயதிலிருந்தும் பின்னணியிலிருந்தும் சுமார் 35 பேர் கலந்து கொண்டனர். தற்சமயம் நம் நாட்டில் அதிகமாக நடக்கும் குற்றச் செயல்கள், பொதுவான மோசடிகள் குறித்தும் அவற்றில் நாம் சிக்காமல் இருக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் இந்தச் சொற்பொழிவில் முக்கியமாகப் பேசப்பட்டது.

பங்கேற்பாளர்கள் அனைவரும் முழு ஈடுபாடுடன் இக்கலந்துரையாடலில் பங்கெடுத்தனர். அதிகாரியிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பி தங்கள் ஐயங்களைப் போக்கினர். மேலும் தங்களுடைய அனுபவத்தையும் இங்கே பகிர்ந்து கொண்டனர். அதோடு பல நல்ல தகவல்களையும் பெற்று கொண்டனர். மிகவும் சுவாரசியமான, பொருள் நிறைந்த கலந்துரையாடலாக இது அமைந்தது.

நிகழ்ச்சியின் இறுதியில், பங்கைப் பிரதிநிதித்து பங்குத் தந்தை மைக்கேல் சியர் அவர்கள் மேல்நிலைத் துணைக் கண்காணிப்பாளர் உயர்திரு அங் அவர்களுக்கு நினைவு சின்னம் வழங்கி நன்றி தெரிவித்தார்.

எட்ரியன் லைனஸ்

# செனவாங் தோட்ட தேசிய மாதிரி ஆரம்பத் தமிழ்ப்பள்ளியில் மரங்கள் நடும் நிகழ்ச்சி



செனாவாங்: அன்மையில் விசிதேசன் தேவாலயத்தைச் சேர்ந்த Creation Justice Ministry (CJM), செனவாங் தோட்ட தேசிய மாதிரி ஆரம்பத் தமிழ்ப்பள்ளியில் மரங்கள் நடும் நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு ஏற்பாடு செய்தது. இதில் இப்பள்ளியைச் சேர்ந்த மாணவர்களும் பெற்றோர் ஆசிரியர் சங்கமும் இணைந்து பங்கெடுத்தனர்.

இந்த நிகழ்ச்சியின் நோக்கம் என்னவென்றால் மாணவர்களுக்குச் சுற்றுசூழலைப் பாதுகாப்பதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி எதிர்கால தலைமுறைகளுக்காக இயற்கை வளங்களைப் பாதுகாத்து பயன்படுத்துவதில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். இது பசுமை பூமியை உருவாக்குவதற்கான ஒரு நிலையான தீர்வாகவும் கருதப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிக்கு முன்னதாக, CJM திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு வின்செண்ட், மாணவர்களிடம் தமிழில் பேசினார். சுற்றுசூழலைப் பாதுகாப்பதில் அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அதனை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டிய அவசியத்தையும் அவர் மாணவர்களிடம் எடுத்து கூறினார்.

மாணவர்கள் தங்கள் கைகளால் சிறிய மரங்களை அவர்களாகவே நட்டுவதன் மூலம் மரங்களை நடும் புதிய அனுபவத்தை அவர்கள் பெற்றனர். இந்த மரங்களைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்று அவர்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி




நிலையான வளர்ச்சிக்கான ஒரு முயற்சியாகவும் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்தது.

இந்நிகழ்ச்சியில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் மரங்கள் அதிகம் நடுவதன் அவசியம் குறித்து நினைவூட்டப்பட்டனர். இது சுற்றுச் பாதுகாக்கவும் மீண்டும் உயிர் கொடுக்கவும் உதவுகிறது. கரியமில வாயுவை உறிஞ்சி பிராண வாயுவை உருவாக்குவதிலும், நிழல் அளிப்பதிலும், பறவைகளின் வாழ்விடங்களை வழங்குவதிலும் மரங்கள் தங்கள் முக்கிய பங்கினை வகுக்கின்றன என்று அனைவருக்கும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஆசிரியர்களில் ஒருவர், "இத்தகைய நடைமுறை அனுபவத்தின் மூலம் மாணவர்களுக்கு ஆழமான அறிவை சிறப்பாகப் புகுத்தியுள்ளனர். அதே சமயம் அவர்களின் வாழ்நாள் கற்றல் நடவடிக்கைக்கு இந்த நடைமுறை அனுபவம் ஒரு பெரிய மாற்றத்தைத் தரும்" என்று நம்பிக்கைத் தெரிவித்தார்.

## பாஸ்கா 5ஆம் வாரம் – ஞாயிறு

# அவரின் துணையோடு அனைத்தையும் நிறைவேற்றுவோம்

இன்று பாஸ்கா 5-வது ஞாயிறுவில் இணைக்கிறோம். இன்றைய முதல் வாசகத்தில் பவுல் மற்றும் பர்னபாவின் முதல் தூதுரைப் பயணம் நிறைவு பெறுவதை லூக்கா பதிவு செய்துள்ளதை வாசிக்கக் கேட்கிறோம். சில இடங்களில் அவர்கள் எதிர்ப்புக்களையும் ஆபத்துக்களையும் சந்திக்க நேர்ந்தாலும் துணிந்து நற்செய்திப் பணிக்குச் செல்கிறார்கள். ஏனெனில், தாங்கள் ஏற்படுத்திய கிறிஸ்தவ சங்கங்களை 'ஊக்கப்படுத்துவதும், உறுதிப்படுத்துவதும் அவசியம்' என அவர்கள் அறிந்திருந்தனர். மேலும், தாங்கள் செல்கின்ற இடங்களில் தங்கள் பணியைத் தொடர்வதற்கான அடிப்படையான தலைவர்களையும் அவர்கள் நியமித்தார்கள் என்று அறிகிறோம்.

இரண்டாம் வாசகம் யோவான் கண்ட இறுதி வெளிப்பாடுகளின் காட்சியில் நான்கு அடையாளங்கள் தோன்றுகின்றன. அவை: 'புதியதொரு விண்ணகமும் மண்ணகமும் ஆகும். கடவுள் முன்னைய விண்ணத்தையும் மண்ணகத்தையும் புதியதாக ஆக்குகின்றார். இரண்டாவதாக, 'கடல் இல்லாமல் போயிற்று.' இது கடவுள் தீமையை வெற்றிகொண்டதை அடையாளப்படுத்துகிறது. ஏனெனில், 'கடல்' என்பது 'தீமை அல்லது பேயின்' உருவகமாகப் பார்த்தனர் இஸ்ரயேல் மக்கள். மூன்றாவதாக, 'புதிய எருசலேம் இறங்கி வருகிறது.. கடவுளுக்கும் மக்களுக்கும் உள்ள உறவு, திருமண உடன்படிக்கை உறவாகப் பார்க்கப்பட்டது. நான்காவதாக, 'சாவு இராது. துயரம் இராது.' இது உலகத்தின் முகத்திலிருந்தே கண்ணீர் துடைக்கப்படும் எனச் சொல்கிறது.

நற்செய்தியில், இயேசு தன்னுடைய மாட்சியால் கடவுளும் மாட்சி பெறுகிறார் என்று சொல்வதன் வழியாக, தன்னுடைய செயல் அனைத்தும் கடவுளின் திருவுளம் மற்றும் நோக்கத்தோடு இணைந்தது என்றும் சொல்கிறார்.

ஆம், நாம் தொடங்கியது எல்லாம் நிறைவேற வேண்டும். நிறைவேற்றுதலின் பொறுப்பு தொடங்கிய நம்மிடமே உள்ளது அவரின் துணையோடு அனைத்தையும் நிறைவேற்றுவோம். அழைத்த ஆண்டவர் நம்மோடு வாழ்கிறார்.

ஆர்.கே. சாமி, காஜாங்